***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 72/2015 – P.W. 3 (LW4)***

| | |
|---|---|
| *Name* | ரவி |
| *Father/Husband's Name* | கோவிந்தசாமி |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 60 |

**1,3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 27.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். டைலர் வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும். எனது தெருக்காரர். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது.

இந்த வழக்கு சம்பந்தமாக எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 08.11.2014 ம் தேதியன்று இரவு 10.30 மணிக்கு அசா.1 புதுவீடு குடிபோவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது அங்கு வெடி வெடித்தது தொடர்பாக அசா.1 க்கும், இவ்வழக்கின் எதிரிகளுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு இவ்வழக்கின் எதிரிகள் அசா.1 ஐ தாக்கி தகாத வார்த்தைகளால் திட்டி, அடித்து காயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல்

விடுத்தார்கள் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிகளுக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 72/2015 – P.W. 4 (LW5)***

| | |
|---|---|
| *Name* | சூரியகுமார் |
| *Father/Husband's Name* | ராசுகளப்பாடியார் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *70* |

*1,3,4* **எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 27.04.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என்னுடைய கையெழுத்து இல்லை. பொன்முடி என்பவர் வீடு குடிப்போகும் விழாவில் தகராறு ஏற்பட்டு போலீசார் அவர்கள் வீட்டிற்கு வந்ததாக கேள்விப்பட்டேன். சம்பவம் குறித்து எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 08.11.2014 ம் தேதியன்று இரவு 10.30 மணிக்கு அசா.1 புதுவீடு குடிபோவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது அங்கு வெடி வெடித்தது தொடர்பாக அசா.1 க்கும், இவ்வழக்கின் எதிரிகளுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது தொடர்பாக 10.11.2014 ம் தேதின்று காலை 08.00 மணிக்கு மன்னார்குடி நகர போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு

பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் நான் சாடசியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிகளுக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.